# மன்னர் சரபோஜி அரசுக் கல்லூரி (தன்னாட்சி), தஞ்சாவூர் - 613 005

எண்: 33/2020-21 நாள்: 20.02.2021

**நிலுவைத்தாள்கள் தேர்வு தொடர்பான சுற்றறிக்கை**

பொருள்: இளநிலை மற்றும் முதுநிலை - ஏப்ரல் 2020 - நிலுவைத்தாள்கள் (Supplementary Exam) தேர்வு நடத்துதல் - தொடர்பாக.

பார்வை: 1. தமிழக அரசு உயர்கல்வித்துறை(கே2) அரசாணை (டி)125 நாள்: 26.08.2020
2. உயர்நீதி மன்ற இடைக்கால ஆணை எண்: W.P.No.16213/20/ dt: 11.01.21
3. தேர்வுக் குழுக் கூட்டம் எண்: 9 நாள்: 19.02.2021

* * * * *

ஏப்ரல் 2020 தேர்விற்கு இளநிலை மற்றும் முதுநிலைப் பாடங்களின் நிலுவைத்தாள்களுக்கு விண்ணப்பித்துள்ள மாணாக்கர்களுக்கு தமிழக உயர்க்கல்வித்துறை (கே2) அரசாணை (டி)125, நாள்: 26.08.2020 –ன்படி தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டன. ஆயினும், மாணவர்களுக்கு பல்கலைக்கழகத்திலிருந்து Provisional Certificate பெற்றுத்தர இயலாத சூழலிலும், மாணவர்கள் தங்களின் மதிப்பெண்களை உயர்த்திக் கொள்ளும் நோக்கத்துடனும், உயர்நீதி மன்ற இடைக்கால ஆணையின் படியும், துணைத்தேர்வுகள் (Supplementary Exams) **24.02.2021** அன்று தொடங்கி **இணையவழியாக நடைபெற உள்ளன.**

இந்த துணைத்தேர்வுகளுடன் (Supplementary Exams) சேர்த்து நவம்பர் **2020** –ல் விண்ணப்பித்துள்ள நிலுவைத்தாள்களுக்கான தேர்வுகளும், Redo தாள்களுக்கான தேர்வுகளும் இணையவழியில் நடத்தப்பட உள்ளன. தேர்வுகள் தொடர்பாக கீழ்காணும் தகவல்கள் தெரிவிக்கப்படுகின்றன.

1. ஏப்ரல் 2020 மற்றும் நவம்பர் 2020 தேர்விற்கு இளநிலை மற்றும் முதுநிலைப் பாடங்களுக்கு இறுதிப் பருவம் தவிர பிற பருவங்களின் நிலுவைத்தாள்களுக்கு பதிவு செய்துள்ள மாணாக்கர்கள் மட்டுமே தேர்வினை எழுதவேண்டும். மேற்கண்ட மாணாக்கர்கள் ஏற்கனவே தேர்வுக்கட்டணம் செலுத்தி விண்ணப்பித்திருந்தவர்கள் என்பதனால், புதிதாக தேர்வுக்கட்டணம்/ பதிவுக்கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது.
2. மாணாக்கர்களும் அவர்கள் எழுதவேண்டிய தாள்கள் குறித்த Galley கல்லூரியின் இணையத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்படும்..
3. தேர்வுகால அட்டவணை 20.02.2021 அன்று கல்லூரி இணையதளத்தில் வெளியிடப்படும்.

4. தேர்வுகளுக்கான வினாத்தாள்கள் தேர்வு நடைபெறும் நாளன்று ஒருங்கிணைப்பாளர்களின் மின்னஞ்சல் / Whatsapp வழியாகவும் மற்றும் கல்லூரி இணையதளம் **www.rsgc.ac.in** வழியாகவும் அனுப்பப்படும்.

5. ஒவ்வொரு நாளும் நடைபெற்ற தேர்வுகளை மாணாக்கர்கள் எழுதிக் குறிப்பிட்ட மின்னஞ்சலுக்கு அனுப்பியதுடன் கல்லூரியில் நேரிடையாக அன்றைய தினமே தேர்வு ஒருங்கிணைப்பாளர்களிடம் ஒப்படைக்க வேண்டும்.

6. தேர்வு ஒருங்கிணைப்பாளர்கள் பெறப்படும் விடைத்தாள்களைத் தரப்படும் உறையிலிட்டுத் தேர்வு நெறியாளர் அலுவலகத்தில் ஒப்படைக்கவேண்டும்.

7. அரசு அறிவித்துள்ள COVID - 19 தடுப்பு நடைமுறைகளை தவறாமல் கடைப்பிடிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

எனவே, துறைத்தலைவர்களும், பேராசியர்களும் இத்தேர்வுகளை சிறப்புடன் நடத்திட ஒத்துழைப்பு நல்குமாறும், மேலும், நிலுவைத்தாள் வைத்துள்ள அனைத்து மாணாக்கர்களும் தேர்வு எழுதும் வகையில் உரிய விவரங்களை மாணாக்கர்களுக்குத் தெரிவிக்குமாறும் அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தேர்வு நெறியாளர்
தேர்வு நெறியாளர்
மன்னர் சரபோஜி அரசு கல்லூரி (தன்னாட்சி)
தஞ்சாவூர்-613 005.

முதல்வர்
முதல்வர்
மன்னர் சரபோஜி அரசு கல்லூரி (தன்னாட்சி)
தஞ்சாவூர்-613 005.